IN THE COURT OF THE ADDL. DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.226/2018
DEPOSITION OF WITNESS (DW1)

ஆரம்பநேரம் :11.31 a.m

பி.வா.சா. 1 சாட்சி பாண்டி த.பெ.கருப்பத்தேவர்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additional District Munsif on 25.02.2025 in accordance with the provisions of Act XX141.**

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. எனது தகப்பனார் பெயர் கருப்பத்தேவர் என்றால் சரிதான். எனது தந்தையை பெற்ற தந்தையின் பெயர் தாளைத்தேவர் என்றால் சரிதான். மேற்படி தாளைத்தேவருக்கு முத்தையாத்தேவர், ஒச்சனத்தேவர், கருப்பத்தேவர், மலையாண்டிதேவர் என்ற 4 பிள்ளைகள் என்றால் சரிதான். எனது தந்தைக்கு 2ஆண்மக்கள், 4பெண்மக்கள் என்றால் சரிதான். பிச்சையம்மாள், சித்ரா, தாளைமுத்து, சாந்தி ஆகியோர் எனது சகோதரிகள் ஆவார்கள். பாண்டி –1, பாண்டி –2 ஆகியோர் எனது சகோதரர்கள் ஆவார்கள்.

2. எனது நிரூபணவாக்குமூலம் மற்றும் எதிர்வழக்குரையில் எனது சகோதரிகள் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் பி.ஏ. படித்துள்ளேன் மற்றும் L.L.Bமுடித்துள்ளேன். தற்போது கூட்டுறவு நகர வங்கி, திருமங்கலத்தில் வேலை பார்த்து வருகிறேன். நான் டிகிரி படித்தவுடன் கூட்டுறவு நகர வங்கிக்கு வேலைக்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். L.L.B எந்த வருடம் முடித்தேன் என்றால் 2015 ஆகும்.

3. L.L.Bமுடித்து வழக்கறிஞராக பணிபுரிந்தேனா என்றால் இல்லை. வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியும். ஆனால் பரிகாரம் தவறு. வாதி வழக்குரையில் கூறியுள்ள விபரங்களை நான் படித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். வழக்குரையில் தாவாச் சொத்தை வாதியின் தாயார் பாப்பம்மாள் சீனியம்மாள் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளதாக கூறியுள்ளார் என்றால் சரிதான்.

4. மேற்படி கிரையத்திற்கு பின்னிட்டு வாதியின் தாயார் பாப்பம்மாள் வீடுகட்டி சீனியம்மாள் என்பவரின் வீட்டை கிரையமாக பெற்று அந்த இடத்தில் அனுபவம் செய்ததாக வழக்குரையில் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா இடம் என்பது எனது தந்தைக்கு கிரையச்சொத்தா அல்லது பூர்வீக சொத்தா என்றால் இரண்டுமே ஆகும். தாவாச் சொத்தை எந்த வருடம் கிரையம் வாங்கினார் என்றால் 3.8.1960ல் 20 3/4 செண்டு ஆகும்.

5. எதிர்கோரிக்கையில் நான் கூறியுள்ள சர்வே எண் 70/6, சர்வே எண் 70/7 என்றால் சரிதான். வாதியின் வழக்குரையில் சர்வே எண் 71/2 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் 71/2 என்பது டவுண்சர்வே எண் 3/2 என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் 3/2ஐ பொறுத்து தேசிய நெடுஞ்சாலைக்கு நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

6. சர்வே எண் 70/6, சர்வே எண் 70/7ஐ பொறுத்த வரை தேசிய நெடுஞ்சாலைக்கு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

( வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

முடிவுடையும் நேரம் :11.40 a.m

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

/sd/E.Manikandan

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.